# TNPSC GROUP II / IIA TEST BATCH 2025
# TURBO TEST – IV
## பொதுத்தமிழ் (திருக்குறள், அறநூல் தொடர்பான செய்திகள், மேற்கோள்கள்)
## APTITUDE AND MENTAL ABILITY

1. "நாடென்ப நாடா வளத்தன" என்ற குறளில் கூறப்படும் செய்தி.
a. நல்ல நாட்டிற்கான இலக்கணம் b. நாட்டின் வளம்
c. நாட்டில் ஏற்படும் தீங்கு d. தீய நாட்டிற்கான இலக்கணம்
e. விடை தெரியவில்லை

2. தாம் கற்றதைப் பிறருக்கு எடுத்துக் கூற இயலாதவரை திருவள்ளுவர் எவ்வாறு உவமிக்கிறார்?
a. மணம் வீசாத மலர் b. அழகற்ற மலர் c. நிறமற்ற மலர்
d. பசுமையற்ற மலர் e. விடை தெரியவில்லை

3. அஃகாமை செல்வத்திற்கு கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள் - இக்குறளில் வெஃகாமை என்ற சொல்லின் பொருள் யாது?
a. வெட்கம் கொள்ளாமை b. பிறரை இகழாமை
c. பிறரிடம் இரந்து வாழாமை d. பிறர் பொருள் மேல் ஆசை கொள்ளாமை
e. விடை தெரியவில்லை

4. மன உடன்பாடு இல்லாதவரோடு சேர்ந்து வாழும் வாழ்க்கை எதனோடு தங்கியிருந்து வருந்துவதற்கு ஒப்பாகும்?
a. பாம்பு b. புலி c. சிங்கம் d. யானை e. விடை தெரியவில்லை

5. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு - இந்த திருக்குறளில் 'இருபுனல்' என்பது யாது?
a. ஆற்று நீர், கிணற்று நீர் b. ஆற்று நீர், குளத்து நீர்
c. மழை நீர், கிணற்று நீர் d. கடல் நீர், மழை நீர்
e. விடை தெரியவில்லை

6. நாட்டிற்கான அணிகலன்களை வள்ளுவர் எந்த வரிசையில் தந்துள்ளார்?
1. செல்வம் 2. இன்பம் 3. ஏமம் 4. பிணியின்மை 5. விளைவு
a. 4, 1, 5, 2, 3 b. 1, 2, 3, 4, 5 c. 4, 3, 5, 2, 1
d. 1, 4, 3, 5, 2 e. விடை தெரியவில்லை

7. “தாளாண்மை இல்லாதவன்” என்று திருவள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?
a. ஊக்கம் இல்லாதவன் b. தர்மம் செய்யாதவன்
c. விடாமுயற்சி இல்லாதவன் d. கோபம் கொள்ளாதவன்
e. விடை தெரியவில்லை

8. ஒரு தூதுவனின் குணங்களாக திருவள்ளுவர் எவற்றைக் கூறுகிறார்?
a. அறிவு, தோற்றம், கல்வி b. அன்பு, அறிவு, தெளிந்த பேச்சு
c. கடமை, காலமறிதல், இடமறிதல் d. தூய்மை, துணைமை, துணிவு
e. விடை தெரியவில்லை

9. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று - இத்தொடரில் பயின்று வரும் அணி யாது?
a. உருவக அணி b. இல்பொருள் உவமை அணி
c. வேற்றுமை அணி d. பிறிது மொழிதல் அணி
e. விடை தெரியவில்லை

10. முரசை ‘மாக்கண் முரசம்’ எனக் குறிப்பிடும் நூல் எது?
a. புறநானூறு b. திருப்பாவை c. நாச்சியார் திருமொழி
d. மதுரைக் காஞ்சி e. விடை தெரியவில்லை

11. ‘அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும்
பிறர்கொளார்’ – எனும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் துறை எது?
a. கையறு நிலை b. மழபுல வஞ்சி c. பொருண்மொழிக் காஞ்சி
d. பெருங்காஞ்சி e. விடை தெரியவில்லை

12. தமிழர்களின் வேதம் என்று அழைக்கப்படும் நூல்
a. தேவாரம் b. திருவாசகம் c. திருக்குறள்
d. நாலடியார் e. விடை தெரியவில்லை

13. மூன்றாவது சங்கத்தை மதுரையில் நிறுவியவர்.
a. இளம்பெருவழுதி b. முடத்திருமாறன் c. முதுக்குடுமி பெருவழுதி
d. நெடுஞ்செழியன் e. விடை தெரியவில்லை

14. “பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே; – என முடியும் புறநானூற்றுப் பாடலின் முதல் அடி எது?
a. யாண்டு பலவாக நரையில ஆகுதல்
b. தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
c. யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
d. ஈ என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்
e. விடை தெரியவில்லை

15. வரலாற்றுச் செய்திகள் மிகுதியாகக் கொண்ட எட்டுத்தொகை நூல் எது?
a. அகநானூறு b. கலித்தொகை c. நற்றிணை
d. குறுந்தொகை e. விடை தெரியவில்லை

16. ‘நாமர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்’ என்று பாடியவர் யார்?
a. திருஞான சம்பந்தர் b. திருநாவுக்கரசர் c. மாணிக்கவாசகர்
d. திருமூலர் e. விடை தெரியவில்லை

17. மன்னனின் செல்வத்தை தேய்க்கும் படை எது?
a. கள்வன் பொருளைக் கைப்பற்றுதல்
b. கொடுங்கோன்மையின் காரணமாக ஏற்பட்ட கண்ணீர்
c. கொல்லுதல் தொழிலை மேற்கொள்ளுதல்
d. மக்களிடம் அதிக வரி வசூலித்தல்
e. விடை தெரியவில்லை

18. பொருத்துக:
A. புத்தமித்திரர் 1. திருமந்திரம்
B. அமிர்தசாகரனார் 2. கலிங்கத்துப்பரணி
C. ஜெயங்கொண்டார் 3. வீரசோழியம்
D. திருமூலர் 4. யாப் பெருங்கலம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

19. ‘தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குகிறது’ என்று கூறியவர் யார்?
a. டாக்டர் கிரௌல் b. பாவலரேறு பெருஞ்சித்திரனார் c. கெல்லட்
d. டாக்டர் கால்டுவெல் e. விடை தெரியவில்லை

20. பொருத்துக:
நூல் நூலாசிரியர்
A. களவழி நாற்பது 1. மூன்றுறையரையனார்
B. கைந்நிலை 2. பொய்கையார்
C. கார்நாற்பது 3. புல்லங்காடனார்
D. பழமொழி 4. கண்ணங்கூத்தனார்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 4 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 4 | 3 | 2 | 1 |
| d. | 1 | 2 | 3 | 4 |

21. e. விடை தெரியவில்லை'பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் யார்?
a. பாரதிதாசன் b. உடுமலை நாராயணகவி c. தந்தை பெரியார்
d. வாணிதாசன் e. விடை தெரியவில்லை

22. 'பட்டிமண்டபம்' என்பது சமயக்கருத்துகள் விவாதிக்கும் இடம் என்று கூறும் நூல்
a. சிலப்பதிகாரம் b. மணிமேகலை c. நீலகேசி
d. குண்டலகேசி e. விடை தெரியவில்லை

23. தவறான இணையைத் தேர்வு செய்க.
a. குறிஞ்சி – கபிலர் b. முல்லை – ஓதலாந்தையார்
c. மருதம் - ஓரம்போகியார் d. நெய்தல் - அம்மூவனார்
e. விடை தெரியவில்லை

24. 'உழவர் பாட்டு' என்று அழைக்கப்படும் நாட்டுப்புறப்பாட்டு எது?
a. தாலாட்டுப் பாட்டு b. கும்மிப் பாட்டு c. பள்ளுப் பாட்டு
d. வில்லுப்பாட்டு e. விடை தெரியவில்லை

25. "அறுமோ, நரி நக்கிற்று என்று கடல்" என்ற பழமொழி உணர்த்தும் பொருள்.
a. வருவாய் உடைய செல்வம் b. பேதை எதையும் செய்ய மாட்டான்
c. ஊழ்வினையால் அமைவதே செயல் d. வல்லவன் காரியம் கெடாது.
e. விடை தெரியவில்லை

26. அறநெறிச்சாரம் என்ற நூலின் ஆசிரியர் யார்?
a. மயிலை நாதர் b. நாற்கவிராசநம்பி
c. பொன்பற்றியூர்ச் சிற்றரசர் புத்தமித்திரர் d. முனைப்பாடியார்
e. விடை தெரியவில்லை

27. முதுசொல், முதுமொழி என்ற சொற்களால் பழமொழியைக் குறிப்பிட்டவர் யார்?
a. கணிமேதாவியர் b. தொல்காப்பியர் c. பூதஞ்சேந்தனார்
d. இளங்கோவடிகள் e. விடை தெரியவில்லை

28. மணநூல் என்று அழைக்கப்படும் நூல் எது?
a. சீவகசிந்தாமணி b. அகநானூறு c. திருக்குறள்
d. சீறாப்புராணம் e. விடை தெரியவில்லை

29. பொருத்துக:
A. இயற்கை ஓவியம் 1. சிந்தாமணி
B. இயற்கை தவம் 2. பெரிய புராணம்
C. இயற்கைப் பரிணாமம் 3. பத்துப்பாட்டு
D. இயற்கை அன்பு 4. கம்பராமாயணம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 2 | 4 | 1 | 3 |

e. விடை தெரியவில்லை

30. அங்கவியல் திருக்குறளில் எந்தப் பகுப்பில் அமைந்துள்ளது?
a. அறத்துப்பால் b. பொருட்பால் c. காமத்துப்பால்
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

31. உலக நிலையாமையை எடுத்துக்காட்டும் நீதிநூல்.
a. திரிகடுகம் b. ஆசாரக்கோவை c. ஏலாதி
d. முதுமொழிக்காஞ்சி e. விடை தெரியவில்லை

32. கொல்துறைக் குற்றில் மாதோ என்றும் உண்டாயின் பதம் கொடுத்து - இப்பாடலின் ஆசிரியர் யார்?
a. தொண்டைமான் b. ஔவையார் c. கபிலர்
d. திருமூலர் e. விடை தெரியவில்லை

33. ‘‘மருந்தே ஆயினும் விருந்தொடு உண்’’ – என்று கூறும் நூல் எது?
a. ஆத்திச்சூடி b. கொன்றைவேந்தன் c. நீதிநெறி விளக்கம்
d. சிறுபஞ்ச மூலம் e. விடை தெரியவில்லை

34. திருக்குறளைச் செருமண் மொழியில் மொழிபெயர்த்தவர் யார்?
a. டாக்டர் ஜி.யு. போப் b. ஆல்பர்ட் சுவைட்சர் c. கார்ல் கிரால்
d. வீரமாமுனிவர் e. விடை தெரியவில்லை

35. பொருத்துக:

| சிறப்புத் தொடர் | நூல்கள் |
|---|---|
| A. தமிழ் வேலி | 1. தேவாரம் |
| B. தமிழ்கெழுகூடல் | 2. திருவாசகம் |
| C. கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ் | 3. பரிபாடல் |
| D. பண்ணொடு தமிழொப்பாய் | 4. புறநானூறு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

36. சரியான விடையை எழுதுக.
நடுத்திராவிட மொழிகள் யாவை?
a. கதபா. பெங்கோ. கோயா
b. தோடா, கோத்தா, கொரகா
c. மால்தோ, குரூக், பிராகுய்
d. கோத்தா, கூவி, மால்தோ
e. விடை தெரியவில்லை

37. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் _______ என அழைக்கப்பட்டன.
a. வட்டெழுத்து
b. தமிழெழுத்து
c. கண்ணெழுத்துகள்
d. சித்திர எழுத்து
e. விடை தெரியவில்லை

38. விடையைத் தேர்க.
‘அகராதி’ என்னும் சொல் முதன் முதலாக இடம் பெற்றுள்ள நூல் எது?
a. சதுரகராதி
b. திருமந்திரம்
c. திருவருட்பா
d. திருக்குறள்
e. விடை தெரியவில்லை

39. கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் என்றழைக்கப்படும் நூல் எது?
a. சதுரகராதி
b. தேம்பாவணி
c. வேதியர் ஒழுக்கம்
d. இரட்சணிய யாத்திரிகம்
e. விடை தெரியவில்லை

40. சிறு பஞ்ச மூலத்தில் கடவுள் வாழ்த்துடன் எத்தனை வெண்பாக்கள் உள்ளன?
a. தொண்ணூறு
b. தொண்ணூற்றேழு
c. நூறு
d. ஐம்பது
e. விடை தெரியவில்லை

41. கல்வி அழகே அழகு’ என்றும்
கல்வி கரையில கற்பவர் நாள் சில’ என்றும் கூறும் நூல்
a. திருக்குறள்
b. நான்மணிக்கடிகை
c. திரிகடுகம்
d. நாலடியார்
e. விடை தெரியவில்லை

42. நிலம், நீர், தீ, வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் ஆதலின் - இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்
a. தொல்காப்பியம்
b. புறநானூறு
c. சிலப்பதிகாரம்
d. சங்குறுநூறு
e. விடை தெரியவில்லை

43. பொருத்துக:

| | |
|---|---|
| A. நிகண்டுகளில் சிறப்பானது | 1. சதுரகராதி |
| B. நிகண்டுகளில் பழைமையானது | 2. சூடாமணி நிகண்டு |
| C. தமிழின் முதல் அகரமுதலி | 3. அபிதான கோசம் |
| D. தமிழ்க் கலைக்களஞ்சியங்களின் முன்னோடி | 4. அபிதான சிந்தாமணி |
| | 5. சேந்தன் திவாகரம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 5 | 2 | 1 | 4 |
| b. | 2 | 5 | 4 | 1 |
| c. | 2 | 5 | 1 | 3 |
| d. | 2 | 5 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

44. ‘‘நெல்லும் உயிர் அன்றே; நீரும் உயிர் அன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்’’
என்ற புறநானூற்று பாடலுக்குப் பொருத்தமாக அமையும் குறள் எது?
a. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.
b. பிணியின்மை செல்வம் விளைவிண்பம் ஏமம்
அணியென்ப நாட்டில் வைந்து.
c. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.
d. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.
e. விடை தெரியவில்லை

45. பின்வருனவற்றுள் புறநானூறு வரி அல்லாதது எது?
a. வலவன் ஏவா வானூர்தி
b. வறிது நிலைஇய காயமும்
c. உறுமிடத் துதவா உவர்நிலம்
d. அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
e. விடை தெரியவில்லை

46. பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைப் இயற்றப்பெறும் நூல்.
a. கலித்தொகை
b. தூது
c. கலம்பகம்
d. பிள்ளைத்தமிழ்
e. விடை தெரியவில்லை

47. கொற்கை முத்தினைச் சிறப்பிக்கும் நூல்கள்
a. அகநானூறு, புறநானூறு
b. மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை
c. மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை
d. பட்டினப்பாலை, புறநானூறு
e. விடை தெரியவில்லை

48. நற்றிணையின் அடிவரையறை
a. 3 முதல் 5 வரை
b. 13 முதல் 21 வரை
c. 4 முதல் 6 வரை
d. 9 முதல் 12 வரை
e. விடை தெரியவில்லை

49. பொருத்துக:

| | |
|---|---|
| A. நீரின்றியமையாது உலகு | 1. மணிமேகலை |
| B. பசிப்பிணி என்னும் பாவி | 2. புறநானூறு மணிமேகலை |
| C. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் | 3. திருக்குறள் |
| D. ஆற்றுணா வேண்டுவது இல் | 4. பழமொழி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 2 | 1 | 4 |
| c. | 3 | 4 | 1 | 2 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

50. பத்துப்பாட்டுள் நக்கீரனார் எழுதிய நூல்கள்
a. வஞ்சிநெடும்பாட்டு, கூத்தராற்றுப்படை
b. புலவராற்றுப்படை, தமிழ்பெருஞ்சுரங்கம்
c. நெஞ்சாற்றுப்படை, மாருகர்பாட்டு
d. திருமுருகாற்றுப்படை, பொருட்கலவை நூல்
e. விடை தெரியவில்லை

51. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து விடையளிக்கவும்.
I. இன்று சிற்றிலக்கியங்களாக கருதப்படும் நூல்கள் ஒருகாலத்தில் பெருங்காப்பியங்களின் உறுப்பாக இருந்தவை ஆகும்.
II. பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை விளக்குகின்றன.
III. வீரமாமுனிவர் தனது சதுரகராதியில் பிரபந்தம் தொண்ணூற்றாறு எனக்கூறி அவற்றின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார்.
a. அனைத்தும் சரி b. I, II மட்டும் சரி c. II, III மட்டும் சரி
d. I, II மட்டும் சரி e. விடை தெரியவில்லை

52. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.
I. புறநானூற்றின் கடவுள் வாழ்த்துப்பாடலைப் பாடியவர் பெருந்தேவனார் ஆவார்
II. புறநானூற்றின் சில பாடல்களை ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்
III. பரிபாடல் அகமும், புறமும் கலந்த நூல் ஆகும்.
IV. தற்பொழுது கிடைத்துள்ள பரிபாடலில் புறப்பாடல்கள் மிகுதியாக உள்ளன.
இவற்றுள் தவறானதைக் கண்டறிக.
a. II மட்டும் தவறு b. III மட்டும் தவறு c. IV மட்டும் தவறு
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

53. பின்வரும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
1. அகநானூற்றை நெடுந்தொகை எனவும் அழைப்பர்
2. இது 13 அடி சிறுமையும் 31 அடிப் பெருமையும் கொண்டுத
3. தொகுப்பித்தவர் உருத்திரசன்மர் ஆவார்
4. இது களிற்றியானைநிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை என மூன்று பிரிவுகளை உடையது
a. 1, 3, 4 சரி b. 2, 4 தவறு c. 1, 2, 4 சரி
d. 1, 3 தவறு e. விடை தெரியவில்லை

54. எட்டுத்தொகையில் ஓங்கு என்னும் அடைமொழி கொண்டு அழைக்கப்படுவது எது?
a. குறுந்தொகை b. கலித்தொகை c. பரிபாடல்
d. ஐங்குறுநூறு e. விடை தெரியவில்லை

55. ஐங்குறுநூற்றின் சரியான திணைவைப்பு முறையைக் கண்டுபிடி.

a. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

b. மருதம், பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல்

c. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை

d. முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை

e. விடை தெரியவில்லை

56. முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர் - என்று கூறும் நூல்

a. நற்றிணை
b. குறுந்தொகை
c. அறவுரைக்கோவை
d. பழமொழி
e. விடை தெரியவில்லை

57. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து - என்ற குறள் குறிப்பது

a. இடமறிந்து செயலாற்றப்பட வேண்டும்

b. தெரிந்து தெளிதல் வேண்டும்

c. காலமறிந்து செயலாற்றப்பட வேண்டும்

d. வலியறிந்து செயலாற்றப்பட வேண்டும்

e. விடை தெரியவில்லை

58. பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

I. தமிழின் முதல் காப்பிய நூல் சிலப்பதிகாரம் ஆகும்

II. குறவஞ்சி என்பது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

III. நாமக்கல் வெ. இராமலிங்கனாருக்கு நடுவணரசு பத்மவிபூஷன் விருது அளித்து சிறப்பித்துள்ளது

IV. ஜி.யு. போப் அவர்களுக்கு தமிழ் மீது பற்று உண்டாவதற்குக் காரணமாக இருந்த நூல்களுள் குறிப்பிடத்தக்கது புறநானூறு ஆகும்

இவற்றுள்

a. I, II, III மட்டும் சரி
b. II, III மட்டும் தவறு
c. I, II IV மட்டும் சரி
d. I, III, IV மட்டும் சரி
e. விடை தெரியவில்லை

59. கடற் பயணத்தின் சிறப்பை – அவை விளக்கும் நூலோடு பொருத்துக:

| | |
|---|---|
| A. விளைந்து முதிர்ந்த விழுமுத்து | 1. பட்டினப்பாலை |
| B. பொன்னுக்கு ஈடாக மிளகு ஏற்றுமதி | 2. புறநானூறு |
| C. காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் | 3. மதுரைக்காஞ்சி |
| D. கட்டுத்தறியில் கட்டிய யானை அசைவது போல் நாவாய் அசைந்தது | 4. அகநானூறு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 3 | 4 | 1 | 2 |

60. பொருத்துக (பதிற்றுப்பத்து நூலின் பகுதிகள் மற்றும் அதன் ஆசிரியர்கள்)

A. மூன்றாம் பத்து — 1. பாலைக் கௌதமனார்
B. ஐந்தாம் பத்து — 2. காக்கைப் பாடினியார்
C. ஏழாம் பத்து — 3. பரணர்
D. ஆறாம் பத்து — 4. கபிலர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 2 | 4 | 1 |
| c. | 1 | 2 | 4 | 3 |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

61. பொருத்துக:

A. நெடுநல்வாடை — 1. 103
B. முல்லைப்பாட்டு — 2. 583
C. மதுரைக்காஞ்சி — 3. 188
D. மலைபடுகடாம் — 4. 782

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 4 | 1 | 3 | 2 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 1 | 4 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

62. ஐங்குறுநூறு பற்றிய பின்வரும் கூற்றுகளை படித்தறிந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

I. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையம் கொண்ட அகவற்பாக்களால் ஆனது
II. திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது
III. தொகுத்தவர் : புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார்
IV. தொகுப்பித்தவர் : யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை

a. I, II, IV சரி b. II, III, IV சரி c. III, IV தவறு
d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

63. 'முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை'
'இத்தொடரில் 'பாணிரண்டு' என்ற தொடரால் குறிக்கப்படும் நூல்கள் எவை?

a. அகநானூறு, புறநானூறு
b. முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு
c. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை
d. சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை
e. விடை தெரியவில்லை

64. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே – என்று
கற்றலின் சிறப்பைக் கூறும் நூல்

a. நற்றிணை b. குறுந்தொகை c. சிறுபஞ்சமூலம்
d. புறநானூறு e. விடை தெரியவில்லை

65. "தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" பாடல் வரி இடம் பெற்ற நூலும் ஆசிரியரும்

a. பெரும்பாணாற்றுப்படை - நல்லாதனார்
b. சிறுபாணாற்றுப்படை - நல்லூர் நத்தத்தனார்
c. திருமுருகாற்றுப்படை - விளம்பி நாகனார்
d. முல்லைப்பாட்டு - நல்லாதனார்
e. விடை தெரியவில்லை

66. பொருத்துக:

A. நாலடியார் 1. திராவிட வேதம்
C. திருக்குறள் 2. வேளாண் வேதம்
C. திருமந்திரம் 3. தமிழ் வேதம்
D. திருவாய் மொழி 4. தமிழர் வேதம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 2 | 4 | 1 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

67. முத்தொள்ளாயிரம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றதைச் சுட்டுக:

a. முத்தொள்ளாயிரப் பாடல்களில் 'புறத்திரட்டு' என்னும் நூலின் வாயிலாக 108 வெண்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன.
b. பழைய உரைநூல்களில் மேற்கோளாக 22 பாடல்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.
c. பழந்தமிழர் பண்பாடு, தமிழக மூவேந்தர்கள், அவர்தம் படைகள், வீரர்கள், போரியல் முறைகள் சொல்லப்பட்டுள்ளன.
d. சுவை மிகுந்த விருத்தப்பாக்கள் கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.
e. விடை தெரியவில்லை

68. பொருத்துக

A. சிவஞானபோதம் 1. மெய்கண்டார்
B. அறநெறிச்சாரம் 2. உமாபதி சிவாச்சாரியார்
C. இலக்கண விளக்கச் சூறாவளி 3. முனைப்பாடியார்
D. உண்மைநெறி விளக்கம் 4. சிவஞான முனிவர்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 2 | 4 | 3 | 1 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 1 | 3 | 4 | 2 |

e. விடை தெரியவில்லை

69. புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் - இப்புறநானூற்று வரியைப் பாடியவர் யார்?
a. பொன்முடியார்
b. பாண்டியன் நெடுஞ்செழியன்
c. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
d. கணியன் பூங்குன்றனார்
e. விடை தெரியவில்லை

70. தமிழில் தோன்றிய முதல் எள்ளல் நகைச்சுவை நூல் எது?
a. பரமார்த்த குருகதை
b. சின்ன சங்கரன் கதை
c. விநோதரச மஞ்சரி
d. வேதாளம் சொன்ன கதை
e. விடை தெரியவில்லை

71. ஏழ் பருவ மங்கையரைப் பற்றிக் கூறும் இலக்கியம் எது?
a. தூது
b. உலா
c. பள்ளு
d. அந்தாதி
e. விடை தெரியவில்லை

72. திரிகடுகம் குறிப்பிடும் தூயவரின் செயல்களில் பொருந்தாதது எது?
a. நீராடிய பின் உண்ணுதல்
b. எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலை
c. உடல் தளர்ந்தாலும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாதிருத்தல்
d. பெரும்பயன் கிடைத்தாலும் பொய்ச்சாட்டு கூறாதிருத்தல்
e. விடை தெரியவில்லை

73. பொருந்தாதது எது?
a. ‘ஓங்கு சீர் மதுரை’ - சிலப்பதிகாரம்
b. ‘மகிழ்நளை மறுகின் மதுரை’ - சிறுபாணாற்றுப்படை
c. ‘தாமரைப் பூவோடு புனரயுஞ்சீருர்’ - பரிபாடல்
d. மாண்புடை மரபின் மதுரை - மதுரைக் காஞ்சி
e. விடை தெரியவில்லை

74. கற்றோர்க்கும் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலன் வேண்டாவாம் - என்ற பாடல் குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் எத்தனையாவது பாடல்
a. பதினொன்றாம் பாடல்
b. பதினான்காம் பாடல்
c. பதிமூன்றாம் பாடல்
d. பதினாறாம் பாடல்
e. விடை தெரியவில்லை

75. பொருத்துக:

A. இன்பம் தருவது 1. நற்பண்பில்லாதவன் பெற்ற பெருஞ்செல்வம்
B. நட்பு என்பது 2. குன்றிமணியளவு தவறு
C. பெருமையை அழிப்பது 3. செல்வம் மிகுந்த காலம்
D. பணிவு கொள்ளும் காலம் 4. சிரித்து மகிழ மட்டுமன்று
E. பயனின்றி அழிவது 5. பண்பு

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 5 | 4 | 2 | 3 | 1 |
| b. | 5 | 2 | 1 | 4 | 3 |
| c. | 3 | 5 | 1 | 2 | 4 |
| d. | 4 | 5 | 3 | 1 | 2 |

e. விடை தெரியவில்லை

76. If difference between compound interest and simple interest for Rs. 32,000 for 2 years is Rs. 20 then the rate of interest is
ரூ. 32,000 அசலுக்கு 2 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டுவட்டிக்கும். தனிவட்டிக்கும் இடையேயுள்ள வித்தியாசம் ரூ.20 எனில் வட்டி வீதம் எவ்வளவு?
a. 2 ⅓ % b. 2 ½ % c. 6 ¼ % d. 4 ½ %

77. If the consecutive English alphabets A to N are represented respectively by the integers from 14 to 1 and alphabet O is represented by zero and the alphabets P to Z are represented from -1 to -11 then find the sum of integers representing SUCCESS?
A முதல் N வரையிலான ஆங்கில எழுத்துகள் முறையே 14 முதல் 1 வரை குறிக்கப்படுகிறது. ஆங்கில எழுத்து என்பது O பூஜ்யத்தில் குறிக்கப்படுகிறது மேலும் P முதல் Z வரையிலான ஆங்கில எழுத்துக்கள் -1 முதல் -11 வரையிலான முழு எண்களால் குறிக்கப்பட்டால் SUCCESS என்ற ஆங்கில வார்த்தையில் உள்ள எழுத்துக்களைக் குறிக்கும் முழுஎண்களின் கூடுதல் காண்க?
a. 16 b. 20 c. 2 d. 18

78. A is thrice as fast as B. If B can do piece of work in 24 days then find the number of days they will take to complete the work together.
A என்பவர் B என்பவரைக் காட்டிலும் வேலை செய்வதில் மூன்று மடங்கு வேகமானவர். B ஆனவர் ஒரு வேலையை 24 நாட்களில் முடிப்பார் எனில், இருவரும் இணைந்து அந்த வேலையை முடிக்க எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்வர் எனக் காண்க.
a. 5 days b. 6 days c. 8 days d. 9 days

79. Find the sum of infinite terms series +1 6 – 48 + 144 – 432 +.......
+ 16 – 48 + 144 – 432 + ........என்ற பெருக்குத் தொடர் வரிசையின் முடிவுறா உறுப்புகள் வரை கூடுதல் காண்க.
a. – 4 b. – 8 c. 8 d. 4

80. $2/\sqrt{2}$, $3/2$, $4/2\sqrt{2}$, $5/4$, ___________

a. $6/\sqrt{2}$ b. $6/8$ c. $6/4\sqrt{2}$ d. $6/\sqrt{5}$

81. The L.C.M. of two Co-Prime number is 6006. One of them is 66. Then find the other number.

இரு சார் பகா எண்களின் மீ.சி.ம. 6006, ஓர் எண் 66 எனில் மற்றோர் எண் என்ன?

a. 1001 b. 101 c. 91 d. 6

82. In throw of three coins find the probability getting at most two head?

மூன்று நாணயம் சுண்டப்படும் போது அதிகபட்சம் இரு தலைகள் விழுவதற்கான நிகழ்தகவு என்ன?

a. 7/8 b. 3/8 c. 4/8 d. 2/4

83. The price of petrol is increased by 25%. By how much percent must a car owner reduce his consumption so that his expenditure on petrol does not increase?

பெட்ரோல் விலை 25% உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கார் உரிமையாளர் தனது பெட்ரோல் செலவு அதிகரிக்காமல் இருக்க, அதன் பயன்பாட்டை எத்தனை சதவீதம் குறைக்க வேண்டும்?

a. 25% b. 30% c. 20% d. 15%

84. The population of a town is 8000. It decreases by 10% during the first year and increases by 20% during the second year. The population after two years will be:

ஒரு நகரத்தின் மக்கள் தொகை 8000. முதல் ஆண்டில் இது 10% குறைகிறது மற்றும் இரண்டாம் ஆண்டில் 20% அதிகரிக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் தொகை என்னவாக இருக்கும்?

a. 8640 b. 8500 c. 8460 d. 8800

85. Simplify / சுருக்குக. $\left[3\frac{1}{4}\div\left\{1\frac{1}{4}-\frac{1}{2}\left(1\frac{1}{2}-\frac{1}{4}-\frac{1}{6}\right)\right\}\right]$

a. 68/5 b. 78/5 c. 42/5 d. 24/5

86. A sum of ₹12,500 amounts to ₹15,500 in 4 years at the rate of simple interest. What is the rate of interest?

₹12,500 என்ற தொகையானது தனிவட்டி வீதத்தில் 4 ஆண்டுகளில் ₹15,500 ஆகிறது. வட்டி வீதம் என்ன?

a. 5% b. 6% c. 7% d. 8%

87. In a certain code '253' means 'books are old'; '546' means 'man is old' and '378' means 'buy good books'. What stands for 'are' in that code?

ஒரு குறிப்பிட்ட குறியீட்டில் "253" என்பது 'books are old', '546' என்பது 'man is old' மற்றும் 378 என்பது 'buy good books'. அந்தக் குறியீட்டில் 'are' என்பதைக் குறிப்பது எது?

a. 2 b. 3 c. 5 d. 6

88. Find the next term in the series: 3, 7, 15, 31, 63, ?

தொடரின் அடுத்த உறுப்பைக் கண்டறியவும்: 3, 7, 15, 31, 63, ?

a. 129 b. 125 c. 131 d. 127

89. Simplify / சுருக்குக: $\frac{(856+167)^2+(856-167)^2}{856\times856\times167\times167}$

a. 0 b. 1 c. 2 d. 3

90. A rectangular grassy plot is 110 m by 65 m. It has a uniform path 2.5 m wide all around it on the inside. Find the area of the path.

ஒரு செவ்வக வடிவ புல்வெளி 110 மீ × 65 மீ பரிமாணம் கொண்டது. அதன் உட்புறம் முழுவதும் 2.5 மீ அகலமுள்ள சீரான பாதை உள்ளது. பாதையின் பரப்பளவைக் கண்டறியவும்.

a. 850 sq. m b. 825 sq. m c. 900 sq. m d. 800 sq. m

91. The length of a rectangular plot is 20 metres more than its breadth. If the cost of fencing the plot at ₹26.50 per metre is ₹5300, what is the area of the plot?

ஒரு செவ்வக மனையின் நீளம் அதன் அகலத்தை விட 20 மீட்டர் அதிகம். ஒரு மீட்டருக்கு ₹26.50 வீதம் அந்த மனைக்கு வேலி அமைக்க ஆகும் செலவு ₹5300 எனில், அந்த மனையின் பரப்பளவு என்ன?

a. 2400 sq. m b. 2500 sq. m c. 2100 sq. m d. 2000 sq. m

92. If EARTH' can be written as 'QPMZS', how can 'HEART' be written in that code?

'EARTH' என்பதை 'QPMZS' என எழுத முடிந்தால், அதே குறியீட்டில் 'HEART' என்பதை எவ்வாறு எழுதலாம்?

a. SQPZM b. SQMPZ c. SPQZM d. SQPMZ

93. How many cubes of 3 cm edge can be cut out of a cuboid of dimensions 18 cm × 12 cm × 9 cm?

18 செ.மீ × 12 செ.மீ 9 செ.மீ பரிமாணங்கள் கொண்ட ஒரு கனசெவ்வகத்திலிருந்து 3 செ.மீ பக்க அளவுள்ள எத்தனை கனசதுரங்களை வெட்டி எடுக்க முடியும்?

a. 68 b. 70 c. 72 d. 78

94. What is the minimum number of straight lines required to make a figure of a hexagon connected to a triangle on one of its sides?

ஒரு அறுகோணத்தின் ஒரு பக்கத்துடன் ஒரு முக்கோணத்தை இணைத்து ஒரு உருவத்தை உருவாக்கத் தேவையான குறைந்தபட்ச நேர்கோடுகளின் எண்ணிக்கை என்ன?

a. 7 b. 8 c. 9 d. 10

95. A does 80% of a work in 20 days. He then calls in B and they together finish the remaining work in 3 days. How long B alone would take to do the whole work?

A ஒரு வேலையின் 80%-ஐ 20 நாட்களில் செய்கிறார். பின்னர் அவர் B-ஐ அழைக்கிறார், அவர்கள் இருவரும் சேர்ந்து மீதமுள்ள வேலையை 3 நாட்களில் முடிக்கிறார்கள். B மட்டும் முழு வேலையையும் செய்ய எவ்வளவு காலம் ஆகும்?

a. 23 days b. 37 days c. 37.5 days d. 40 days

96. Two pipes can fill a cistern in 14 hours and 16 hours respectively. The pipes are opened simultaneously and it is found that due to leakage in the bottom it took 32 minutes more to fill the cistern. When the cistern is full, in what time will the leak empty it?

இரண்டு குழாய்கள் ஒரு தொட்டியை முறையே 14 மற்றும் 16 மணி நேரத்தில் நிரப்ப முடியும். குழாய்கள் ஒரே நேரத்தில் திறக்கப்பட்டு, கீழே உள்ள கசிவு காரணமாக தொட்டியை நிரப்ப 32 நிமிடங்கள் கூடுதலாக ஆனது கண்டறியப்பட்டது. தொட்டி நிரம்பியவுடன், கசிவு அதை எவ்வளவு நேரத்தில் காலி செய்யும்?

a. 108 hours b. 112 hours c. 115 hours d. 120 hours

97. Two numbers are respectively 20% and 50% more than a third number. The ratio of the two numbers is:

இரண்டு எண்கள் மூன்றாவது எண்ணை விட முறையே 20% மற்றும் 50% அதிகம், அந்த இரண்டு எண்களின் விகிதம்:

a. 2 : 5 b. 3 : 5 c. 4 : 5 d. 6 : 7

98. Find the LCM of $3(a-1)$, $2(a-1)^2$, $(a^2-1)$

$3(a-1)$, $2(a-1)$, $(a^2-1)$ – ன் மீச்சிறு பொது மடங்கு காண்க.

a. $(a+1)^2(a+1)$ b. $(a-1)^2(a+1)$ c. $6(a-1)(a+1)^2$ d. $6(a-1)^2(a+1)$

99. Find the compound interest for 2 years on ₹4000 at 10% p.a if the interest is compounded yearly.

₹4000 இக்கு 10% ஆண்டு வட்டியில், ஆண்டுக்கொரு முறை வட்டிக் கணக்கிடப்படும் முறையில் 2 ஆண்டுகளுக்கு, கிடைக்கும் கூட்டு வட்டியைக் காண்க.

a. 640 b. 740 c. 940 d. 840

100. The radius of a circular cylinder is the same as that of a sphere. Their volumes are equal. The height of the cylinder is

a. 4/3 times its radius b. 2/3 Times its radius

c. equal to its radius d. equal to its diameter

ஒரு நேர்வட்ட உருளையின் ஆரம், கோளத்தின் ஆரத்திற்கு சமம், மேலும் அவைகளின் கன அளவுகள் சமம் எனில் நேர்வட்ட உருளையின் உயரம் யாது?

a. 4/3 மடங்கு அதன் ஆரம் b. 2/3 மடங்கு அதன் ஆரம்

c. அதனுடைய ஆரத்திற்கு சமம் d. அதன் விட்டத்திற்கு சமம்